## பாடம் 5

ஜனவரி 25-31



# அகந்தையிலிருந்து தாழ்மைக்கு

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *தானி 4:1-33; நீதி 14:31; 2இராஜா 20:2-5; யோவான் 3:10; தானி 4:34-37; பிலி 2:1-11.*

**மனன வசனம்:** அவருடைய அடையாளங்கள் எவ்வளவு மகத்துவமும், அவருடைய அற்புதங்கள் எவ்வளவு வல்லமையுமாயிருக்கிறது; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; அவருடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாக நிற்கும். தானி 4:3.

முதல் பாவம் என்று அழைக்கப்படுவது அகந்தை. பரலோக மன்றங்களிலிருந்து ஒரு தூதனாகிய லூசிபரிடம்தான் முதன்முதலாக இது வெளிப்பட்டது. அதனால்தான் தேவன் பின்வருமாறு சொல்கிறார்: "உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்; உன்னைத் தரையிலே தள்ளிப்போடுவேன்; ராஜாக்கள் உன்னைப் பார்க்கும்படி உன்னை அவர்களுக்கு முன்பாக வேடிக்கையாக்குவேன்." எசே 28:17.

அகந்தை லூசிபரை விழச்செய்தது; அதனால் மனிதர்களுக்குள் அகந்தையை ஊட்டி, அவர்களை தேவனுக்கு எதிராக மாற்றவும், அழிவுக்குள் வழிநடத்தவும் சாத்தான் செயல்படுகிறான். நாம் விழுந்துபோனவர்கள். தேவனைச் சார்ந்தே நம் வாழ்க்கை இருக்கிறது. நாம் பெற்றிருக்கிற ஈவுகளையும், அவற்றால் செய்கிற சாதனைகளையும் தேவன் மட்டுமே தருகிறார். எனவே எல்லாவற்றிலும் தாழ்மையுடன் இருக்க வேண்டிய நாம் பெருமையோடும் அகந்தையோடும் நடக்கலாமா?

தாழ்மையின் முக்கியத்துவத்தை நேபுகாத்நேச்சார் அறிய வெகு காலம் ஆகிவிட்டது. அக்கினிச்சூளையில் நான்காவது நபரைப் பார்த்த பிறகும்கூட அவனுடைய வாழ்க்கை மாறவில்லை. தேவன் அவனிடமிருந்து ராஜ்யபாரத்தைப் பிடுங்கி, மிருகங்களோடு சஞ்சரிக்க விடப்பட்டபிறகுதான், தன் உண்மை நிலையை உணருகிறான்.

*2020 பெப்ரவரி 1 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# இது மகா பாபிலோன் அல்லவா?

**கேள்வி: தானி 4:1-33ஐ வாசியுங்கள். ராஜாவுக்கு என்ன நிகழ்ந்தது? ஏன்?**

இரண்டாவது ஒரு சொப்பனத்தை நேபுகாத்நேச்சாருக்கு தேவன் கொடுக்கிறார். இந்த முறை ராஜாவுக்கு சொப்பனம் மறக்கவில்லை. ஆனால் பாபிலோனின் ஞானிகளால் இந்த முறையும் விளக்கம்சொல்ல முடியவில்லை; எனவே, தானியேலை அழைக்கிறான். சொப்பனத்தில் வானுயர மரம் ஒன்றை ராஜா பார்க்கிறான், அந்த மரத்தை வெட்டும்படி பரலோக ஜீவிகளில் ஒருவன் சொல்கிறான். அடிமரத்தையும் அதன் வேர்களையும்மட்டும் விடவும், அது ஆகாயத்துப் பனியிலே நனையவும் வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால், அந்தப் பரலோக ஜீவி, ‘‘அவனுடைய இருதயம் மனுஷ இருதயமாயிராமல் மாறும்படி, மிருகஇருதயம்அவனுக்குக்கொடுக்கப்படக்கடவது;இப்படியிருக்கிற அவன்மேல் ஏழு காலங்கள் கடந்துபோகவேண்டும்’’ என்று சொன்னது தான் நேபுகாக்நேச்சாரைக் கலங்கப்பண்ணியிருக்க வேண்டும். தானி 4:16. சொப்பனத்தின் தீவிரம் தானியேலுக்குப் புரிந்தது; எனவே ராஜாவினுடைய எதிரிகளுக்கு அது சம்பவித்தால் நல்லதென்கிறான். இருந்தாலும், சொப்பனத்தின் செய்தியை மறைக்காமல், அது ராஜாவைச் சுட்டிக்காட்டினதாகச் சொல்கிறான்.

வேதாகமத்தில் மரங்கள் ராஜாக்களைச் சுட்டிக்காட்டுகிற அடையாளங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எசே 17; 31; ஓசியா 14; சகரியா 11:1,2; லூக்கா 23:31. எனவே அந்த வானுயர மரமானது அகந்தைமிக்க அந்த அரசனைச் சுட்டிக்காட்டுகிற சரியான அடையாளமாக இருந்தது. நேபுகாத்நேச்சாருக்கு தேவன் ஆளுகையையும் அதிகாரத்தையும் கொடுத்தார். ஆனால், தான் பெற்றிருக்கிற அனைத்தும் தேவன் தந்தவையென உணர அவன் மறுக்கிறான்.

**கேள்வி: தேவன் கொடுத்த எச்சரிப்பை ராஜா புரிந்துகொள்ளவே இல்லையென்பது எவ்வாறு தெரிகிறது? தானி 4:30.**

நாம் எல்லாவற்றிற்கும் தேவனையே சார்ந்திருப்பதை அகந்தை மறக்கச்செய்துவிடும். அதை நாம் மறக்கும்போது, ஆவிக்குரிய வாழ்வில் ஆபத்தான நிலைக்குச் செல்கிறோம்.

உங்களுடைய வாழ்க்கையில் என்னவெல்லாம் சாதித்திருக்கிறீர்கள்? அகந்தை எண்ணம் எழாமல் அவற்றில் பெருமிதம் கொள்ளமுடியுமா? எவ்வாறு?

திங்கள் ஜனவரி 27

## தீர்க்கதரிசி எச்சரித்தார்

**கேள்வி:** **நடக்கபோவதைக் குறித்து எச்சரித்தாலும்கூட, ராஜாவுக்கு தானியேல் சொன்ன ஆலோசனை என்ன? ஏன்? நீதி 14:31.**

---

---

சொப்பனத்தின் அர்த்தத்தைச் சொல்லி, அந்தச் சூழ்நிலையிலிருந்து தப்புவதற்கான வழியையும் தானியேல் சொல்கிறான்: 'ஆகையால் ராஜாவே, நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரித்துக் கொண்டு நீதியைச் செய்து உமது பாவங்களையும், சிறுமையானவர்களுக்கு இரங்கி உமது அக்கிரமங்களையும் அகற்றிவிடும்; அப்பொழுது உம்முடைய வாழ்வு நீடித்திருக்கலாம் என்றான்.' தானி 4:27.

பாபிலோனில் மிகப்பெரிய அளவில் நேபுகாத்நேச்சார் கட்டுமானப் பணியைச் செய்திருந்தான். தோட்டங்கள், கால்வாய் அமைப்புகள், நூற்றுக்கணக்கான கோயில்கள் போன்ற ஏராளமான கட்டுமானத் திட்டங்கள் அந்த நகரத்தை பண்டையகால அதிசயங்களில் ஒன்றாக மாற்றியிருந்தன. ஆனால் அத்தகைய பிரமாண்டத்தையும் அழகையும் ஒருபுறம் அடிமைகளை வேலைவாங்கி, ஏழைகளைப் புறக்கணித்து அவன் சாதித்தையும் மறுக்கமுடியாது. ராஜ்யத்தின் செல்வச்செழிப்பால் ராஜாவும் அவனுடைய பரிவாரங்களும் சுகபோகமாக வாழ்ந்தார்கள். எனவே, நேபுகாத்நேச்சார் அகந்தையோடு இருந்தது, தேவனை அவன் அங்கீகரிக்கவிடாமலும், அதன் விளைவாக ஏழைகளின் பாடுகளைக் காணக்கூடாமலும் செய்தது. ஏழைகள்மேல் தேவன் மிகுந்த அக்கறையுடையவராக இருக்கிறார்; அதனால்தான் ராஜாவிடம் வேறு பாவங்களையும் வலியுறுத்த வாய்ப்பிருந்தும், ஏழைகளைப் புறக்கணிக்கிற பாவத்தைமட்டும் வலியுறுத்துகிறான்.

அது ஒன்றும் புதிய செய்தியல்ல. ஏழைகளை ஒடுக்கக்கூடாதென பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மக்களை எச்சரித்துக்கொண்டே இருந்தார்கள். ஏழைகளைப் புறக்கணித்ததால்தான் ராஜா நாடுகடத்தப்பட்டான். ஏழைகளை ஆதரிப்பது கிறிஸ்தவ தயாளக்குணத்தின் உச்சக்கட்ட செயலாகும். மாறாக, ஏழைகளைப் புறக்கணித்து, ஒடுக்குவது தேவனையே தாக்குவதாகும். அனைத்தும் தேவனுக்குச் சொந்தமானவை. நாம் அவற்றுக்குச் சொந்தக்காரர்கள் அல்லர். அவருடைய உடைமைகளின் உக்கிராணக்காரர்கள்மட்டுமே என்பதை உணர்ந்து, நாம் ஏழைகளைப் பராமரிக்கவேண்டும்.

நம் வசதிவாய்ப்புகளிலிருந்து ஏழைகளுக்கு உதவும்போது, தேவனைக் கனப்படுத்துகிறோம். அவரே உரிமையாளரென ஒத்துக்கொள்கிறோம். அதை உணர்ந்துதான் நம் உடைமைகளை மதிப்பிடவேண்டும், பயன்படுத்த வேண்டும். நேபுகாத்நேச்சார் அதைச் செய்யத் தவறிவிட்டான். நம்முடைய சாதனைகளுக்கும் தேவனே எஜமான் என்பதை உணர்ந்து, ஏழைகளுக்கு உதவிசெய்வதில் அதை வெளிப்படுத்தாவிட்டால், நாமும்கூட இதில் தவறிவிடுவோம்.

## ‘உன்னதமானவர் ஆளுகைசெய்கிறார்’

மனந்திரும்பி, தேவனிடம் மன்னிப்புகேட்கும்படி சொன்னாலும் கூட, நேபுகாத்நேச்சார் அகந்தையோடிருந்தான்; பரலோகத் தண் டனைக்கு ஆளானான். தானி 4:28-33. ராஜா தன் அரமனைமேல் உலாவி, தன் சாதனைகளைப் புகழ்ந்தபோது, மனப்பதிப்பால் வாதிக் கப்படுகிறான்; அரன்மனையிலிருந்து வெளியேற்றப்படுகிறான். தன்னை ஒரு மிருகமாக எண்ணி, அதன்படி செயல்படக் தூண்டுகிற ஒரு மனப்பாதிப்புக்கு அவன் ஆளாகியிருக்கவேண்டும். தற்காலத்தில் அதை ‘மிருகயின மனப்பிரம்மை’ என்று அழைக்கிறார்கள். அதாவது, சரீரமானது ஏதோ மிருகத்தைப் போலிருப்பதாக நினைத்து, மிருகம் போல மாற ஆசைப்படுவதாகும்.

**கேள்வி: அந்தத் தண்டனையை ராஜா தவிர்த்திருக்கக்கூடிய ஒரே வழி என்ன? 2இராஜா 20:2-5; யோனா 3:10; எரேமியா 18:7,8.**

கடினமான விதத்தில் நேபுகாத்நேச்சார் பாடம்படிக்க வேண்டிய தாயிற்று. அரசாளும் அதிகாரத்தை தேவன் கொடுத்திருந்தபோது, தேவனோடு தனக்குள்ள உறவுபற்றி நேபுகாத்நேச்சாரால் சிந்திக்க இயலவில்லை. எனவே, ராஜாவிடமிருந்து அரசாளும் அதிகாரம் பறிக் கப்படுகிறது; வெளியின் மிருகங்களோடு சஞ்சரிக்க விடப்படுகிறான். தான் முற்றிலும் தேவனையே சார்ந்திருப்பதை அவன் உணந்துகொள் ளுவதற்கு தேவன் மீண்டும் ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறார். ‘பர லோகம் அரசாளுகிறது’ என்கிற பாடத்தை ராஜா அறிந்துகொள்ள தேவன் விரும்பினார். தானி 4:26. ராஜாவுக்குக் கொடுக்கப்பட்ட தீர்ப்பு தேவனுடைய திட்டத்தின்படி பரந்த நோக்கமுடையது; பரலோக ஜீவி களின் வார்த்தைகளில் அது தெளிவாக வெளிப்படுகிறது: ‘உன்னத மானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்குச் சித்த மானவனுக்கு அதைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின் மேல் அதிகாரியாக்குகிறார் என்று நரஜீவன்கள் அறியும்படிக்குக் காவ லாளரின் தீர்ப்பினால் இந்தக் காரியமும் பரிசுத்தவான்களின் மொழியி னால் இந்த விசாரணையும் தீர்மானிக்கப்பட்டது என்றான்.’ தானி 4:17.

நேபுகாத்நேச்சாருக்குக் கொடுக்கப்பட்ட சிட்சையானது நம் ஒவ் வொருவருக்கும் பொருந்தும். ‘நரஜீவன்கள்’ என்பதில் நாமும் உண்டு என்பதால், ‘உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்கிறார்’ என்கிற பாடத்தை நாமும் கற்றுக்கொள்ளவேண்டும்.

உன்னதமானவர் ஆளுகை செய்கிறார் என்பதை நாமும் கற்றுக்கொள்ள வேண்டியது ஏன் முக்கியமானது? இதை அறிந்திருப்பது, நம்முடைய அதிகாரத்திற்கு கீழுள்ளவர்களை நாம் நடத்தவேண்டிய விதத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தவேண்டும்?

# கண்களை வானத்துக்கு ஏறெடுத்தல்

**கேள்வி: எப்படி, எதற்காக ராஜாவுக்கு அவை நேரிட்டன? தானி 4:34-37.**

விநோதமான ஒரு நோயை நேபுகாத்நேச்சாருக்கு தேவன் அனுமதிக்கிறார்; இறுதியில் வலுவான மனநிலை அவனுக்கு திரும்பி வரும்படி செய்கிறார். தீர்க்கதரிசி முன்னுரைத்ததுபோல ஏழு வருடங்கள் கடந்ததும், ராஜா கண்களை வானத்துக்கு ஏறெடுக்கிறான்.

'ஏழு வருடங்கள் தன் குடிமக்கள் யாவரின் திகைப்புக்கும் ஆளானான் நேபுகாத்நேச்சார்; ஏழு வருடங்கள் உலகத்தார் அனைவருக்கும் முன்பாக அவன் தாழ்த்தப்பட்டான். அதன்பிறகு, அவனுடைய புத்தி அவனுக்குத் திரும்ப வந்தது; தாழ்மையோடு பரலோக தேவனை நோக்கிப்பார்த்தான்; தான் சிட்சிக்கப்பட்டதில் தேவ கரம் இருந்ததை உணர்ந்தான். தன்னுடைய குற்றத்தையும், தன்னைக் குணப்படுத்தியதில் தேவன் காட்டிய மிகுந்த கிருபையையும் ஒத்துக்கொண்டு, மக்களிடம் அறிக்கைசெய்தான்.' *PK,* பக். 520.

வானத்துக்கு கண்களை ஏறெடுக்கும்போது மிகப்பெரிய மாற்றங்கள் உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை. புத்தி திரும்ப வந்ததுமே, தேவையான பாடத்தைக் கற்றுவிட்டதை ராஜா அறிக்கையிடுகிறான்.

இந்தச் சம்பவத்தில் நேபுகாத்நேச்சாரைப் பற்றியல்ல, தேவனுடைய கிருபையைப்பற்றிப் படிக்கிறோம். இஸ்ரவேலின் தேவனை தன் ஜீவனின் தேவனாக ஏற்றுக்கொள்ள கொடுக்கப்பட்ட மூன்று வாய்ப்புகளை ராஜா தவறவிட்டான்.

**முதலாவது,** யூதக்கைதிகள் ஞானத்தில் சிறந்து விளங்கியதைக் கண்டான். தானி 1.

**இரண்டாவது,** சொப்பனத்திற்கு தானியேல் விளக்கம் சொன்னதைக் கண்டான். தானி 2.

**மூன்றாவது,** மூன்று எபிரெய வாலிபர்கள் அக்கினிச்சூளையிலிருந்து விடுவிக்கப்பட்டதைக் கண்டான். தானி 3. அந்த அற்புதம்கூட அவனுக்குள் தாழ்மையைக்கொண்டுவராவிட்டால், வேறு எது கொண்டுவரமுடியும்?

**நான்காவது** ஒரு வாய்ப்பைக் கொடுக்கிறார். அதில் அவனுடைய இருதயத்தில் இடம்பிடிக்கிறார், அவனை மீண்டும் ராஜாவாக்கினார். தானி 4. தேவனோடு நம் உறவு சீராகும்படிக்கு, ஒவ்வொரு வாய்ப்பாக அவர் தருகிறார் என்பதை நேபுகாத்நேச்சாருடைய சம்பவம் காட்டுகிறது. கர்த்தர் 'எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்' என்று பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பவுல் எழுதுகிறான். 1தீமோ 2:4. அது முற்றிலும் உண்மை என்பதை இந்தச் சம்பவத்தில் பார்க்கிறோம்.

தேவன் எப்படியெல்லாம் உங்களைத் தாழ்மைப்படுத்தியிருக்கிறார்? அந்த அனுபவத்திலிருந்து என்ன கற்றுக்கொண்டீர்கள்? கடினமான விதத்தில் பாடத்தைப் படிக்க விரும்பவில்லையென்றால் என்னென்ன மாற்றங்களை நீங்கள் செய்யவேண்டும்?

# தாழ்மையும் நன்றியுணர்வும்

**கேள்வி: மனமாறிய ராஜா, 'பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப் படுகிறார்கள்' என்று சொல்கிறான். தானி 4:35. அப்போது அவன் இருந்த சூழ்நிலை யின் பின்னணியில் அவன் சொல்கிற கருத்து புரிகிறதா?**

---

மெய்யான தேவனை நேபுகாத்நேச்சார் உண்மையாக ஏற்றுக் கொண்டான் என்று எவ்வாறு அறிவது? தானியேல் புத்தகத்தில் உட் செருகலாகவுள்ள 4ம் அதிகாரத்தை எழுதியதே ராஜாதான் என்பது அதற்கு மிகப்பெரிய ஆதாரம். ராஜா தன் ராஜ்யம்முழுவதிலும் விநி யோகித்த ஒரு கடிதத்தின் பிரதி இந்த அதிகாரம். தான் அகந்தையா யிருந்து பைத்தியமானதையும், தேவன் தன் வாழ்வில் இடைபட்டதை யும் தாழ்மையோடு சொல்கிறான். முற்காலத்தில் ராஜாக்கள் தங்களைப் பற்றி தரக்குறைவாக எழுதவே மாட்டார்கள். பண்டைய அரச ஆவ ணங்கள் எல்லாமே மன்னர்களைப் புகழ்கிறவையாக இருக்கின்றன. எனவே தான் அகந்தையோடிருந்து, மிருகம்போல மாறினதை ராஜா ஒத்துக்கொள்கிற இந்த ஆவணம் மெய்யான மனமாற்றத்தைச் சுட்டிக் காட்டுகிறது. மேலும், தன் அனுபவத்தைச் சொல்லி, தேவனுடைய மகத்துவத்தை தாழ்மையோடு அறிக்கையிடுவதால், ராஜா இங்கு ஒரு நற்செய்தியாளனாகச் செயல்படுகிறான். தான் அனுபவித்து, தேவனிட மிருந்து கற்றுக்கொண்டதை தனக்குள்ளேயே அவனால் வைத்துக் கொள்ள முடியவில்லை. எனவே ராஜாவினுடைய இந்த ஜெபத்திலும், துதியிலும் அவனுடைய மெய்யான மனமாற்ற அனுபவம் வெளிப் படுவதைக் காணமுடிகிறது. தானி 4:34-37.

ராஜாவின் விழுமியங்கள் மாறியிருந்தன; மனித ஆற்றலின் வரை முறைகளைப் புரிந்துகொண்டான். ஆழமான நன்றியறிதலின் ஜெபத் தில், தானியேலுடைய தேவனின் வல்லமையைப் புகழ்கிறான்; 'பூமி யின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள்' என்று ஒத்துக்கொள்கிறான். தானி 4:35. அதாவது, மனிதர்கள் தங் களைப்பற்றி பெருமைபாராட்ட ஒன்றுமே இல்லை. நேபுகாத்நேச்சார் தாழ்மையும் நன்றியும் உள்ளவனாக, தேவனைப் புகழ்ந்துபாடி, அகந்தைக்கு எதிராக நம்மை எச்சரிப்பதாக அவனைப்பற்றி தானியேல் புத்தகம் சொல்கிறது.

தேவன் இன்றைக்கும் வாழ்வை மாற்றிக்கொண்டிருக்கிறார். மனி தர்கள் எவ்வளவுதான் பெருமையும் பாவமும் உள்ளவர்களாக இருந் தாலும், தேவனுடைய இரக்கம் குறைவதில்லை; கலகக்கார பாவிகளை பரலோகத்தின் தேவனுடைய பிள்ளைகளாக மாற்றுகிற அவருடைய வல்லமையும் குறைவதில்லை.

நம்முடைய வாழ்க்கையில் அகந்தையை ஒட்டுமொத்தமாக விரட்டியடிக்கும்படி பிலிப்பியர் 2:1–11 இல் காணப்படுகிற விஷயம் என்ன?

# வெள்ளி ஜனவரி 31

## மேலும் படிக்க:

'ஒரு சமயத்தில் அகந்தைமிக்க ராஜாவாக இருந்தவன், இப்போது தேவனுடைய தாழ்மையான பிள்ளையாக மாறினான்.கொடுங்கோன்மையும் ஆணவப் போக்குமுள்ள மன்னனாக விளங்கியவன், ஞானமும் மனதுருக்கமுமுள்ள ராஜாவாக மாறினான். பரலோக தேவனை எதிர்த்துத் தூஷணம் பேசியவன், இப்போது உன்னதமானவரின் வல்லமையை ஒத்துக்கொண்டான்; தன் குடிமக்களின் சந்தோஷத்தையும் யேகோவாவின் மேலுள்ள பயத்தையும் பெருகச் செய்ய ஊக்கமாக முயன்றான். இராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவரின் கடிந்துகொள்ளுதலினால், சகல மன்னர்களும் அறியவேண்டிய ஒரு பாடத்தை அறிந்துகொண்டான். 'மெய்யான நற்குணத்தில்தான் மெய்யான மேன்மை அடங்கியிருக்கிறது' என்பதுதான் அந்தப் பாடம். யேகோவாவை ஜீவனுள்ள தேவனாக ஏற்றுக்கொண்ட அவன், "நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன்; அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள்; அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும்" என்றான்.

உலகின் மிகப்பெரும் ராஜ்யம் தேவனுடைய புகழை வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவநோக்கம் இப்போது நிறைவேறியது. தேவனுடைய கிருபையையும் தயவையும் அதிகாரத்தையும் ஏற்றுக்கொண்டு, வெளிப்படையாக அவன் கொடுத்த இந்த அறிவிப்புதான் பரிசுத்த வரலாற்றில் அவன் வாழ்வைப்பற்றிப் பதிவுசெய்யப்பட்டுள்ள கடைசிச் செயல்." — *EGW, PK,* பக். 521.

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *'அகந்தை மற்ற அனைத்து தீங்குக்கும் வழிநடத்துகிறது: அது முற்றிலும் தேவனுக்கு எதிரான ஒரு மனநிலையாகும். இது மிகைப்படுத்திச் சொல்லப்படுபவதுபோலத் தோன்றுகிறதா? தோன்றினால், இதுபற்றிச் சிந்தியுங்கள். ஒருவரிடம் எவ்வளவு அகந்தை உள்ளதோ, அவ்வளவுக்கு அவர் மற்றவரில் உள்ள அகந்தையை வெறுப்பார். உங்களிடம் எவ்வளவு அகந்தை இருக்கிறதென நீங்கள் காண விரும்பினால், அதற்கு எளிய வழி, "மற்றவர்கள் என்னை மட்டந்தட்டும்போதும், என்னைக் கவனிக்க மறுக்கும்போதும், தேவையில்லாமல் மூக்கை நுழைக்கும்போதும், இழிவாக நடத்தும்போதும், பெருமை பாராட்டும்போதும் எனக்கு எவ்வளவு வெறுப்பாக இருக்கிறது?" என்று உங்களை நீங்கள் கேட்பதுதான். விருந்தில் எனக்கு முதலிடம் வேண்டுமென விரும்புவதால், வேறு யாருக்காவது முதலிடம் கொடுக்கப்பட்டால் அதிக எரிச்சலடைகிறேன். ஒரே வியாபாரத்திலுள்ள இருவரால் ஒருபோதும் ஒத்துப்போகமுடியாது.' - சி.எஸ். லீவிஸ்.*

2 *இந்த அதிகாரத்திலும், இதற்கு முந்தின அதிகாரத்திலும் 'தேவன் எல்லாவற்றிற்கும் பெரியவர் என்கிற கருத்து முன்வைக்கப்படுகிறது. இந்தக் கருத்தைப் புரிந்துகொள்வது ஏன் முக்கியமானது? இந்த முக்கிய உண்மையைப் புரிந்துகொள்வதற்கு ஓய்வுநாள் என்ன பங்காற்றுகிறது?*